விழுப்புரம் மாவட்டம் ஒலக்கூர் ஒன்றியம் திண்டிவனம்கோவிந்தசாமி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துப் பெட்டகத்தினை வழங்கி முகாமினை ஆய்வு செய்தார். உடன்விழுப்புரம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர், தொழிலாளர் நலத்துறை ஆணையர் ராமன், மாவட்ட வருவாய் அலுவலர் அரிதாஸ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, மாவட்ட மருத்துவ அலுவலர்கள் டாக்டர் லதா, டாக்டர் செந்தில்குமார்,ஒலக்கூர் ஒன்றிய சேர்மன் சொக்கலிங்கம், துணை சேர்மன் ராஜாராமன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளனர்.

மெய்சிலிர்த்து நிற்கிறேன்!

— முதல்வர் மு.க.ஸ்டாலின்!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

மெய்சிலிர்த்து நிற்கிறேன்...

விழுப்புரம் மாவட்டம் சிறு வந்தாட்டைச் சேர்ந்த ஓவியர் டி.ஆர்.கோவிந்தராஜன் அவர்கள் எழுதிய கடிதமும் ஓவியப் புத்தகமும் நேற்று வந்தடைந்தது.

அவருக்கு வயது 87ஆம்!

அவரது எழுத்தில் வெளிப்படும் கழகப் பற்றைக் காணுங்கள்... தமிழ் மண்ணில் தமிழர்களின் உணர்வால் வேர்விட்டிருக்கும் நம் திராவிட முன்னேற்றக் கழகம் இன்னும் நூறு ஆண்டுகளைக் கடந்தும் நிலைத்து நிற்கும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

கடலூர் கிழக்கு மாவட்டத்தில்

5 சட்டமன்றத் தொகுதி - பாகநிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!

கடலூர், செப். 24-

கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார்கோயில், குறிஞ்சிப்பாடி, சிதம்பரம், கடலூர், புவனகிரி ஆகிய ஐந்து சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள பாக நிலை முகவர்கள் (BLA2), மற்றும் தேர்தல் ஒருங்கிணைப்புக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும் என்று அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எம். ஆர். கே. பன்னீர் செல்வம்தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார்கோயில், குறிஞ்சிப்பாடி, சிதம்பரம், கடலூர், புவனகிரி ஆகிய ஐந்து சட்டமன்றத் தொகுதிகளில் பாக நிலை முகவர்கள் (BLA2), மற்றும் தேர்தல் ஒருங்கிணைப்புக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் கீழ் கண்ட பட்டியலில் உள்ள வாரு நடைபெற உள்ளது.

24.9.2025-புதன்கிழமை காலை 10.00 மணி காட்டுமன்னார் கோயில்கிருஷ்ணா மஹால் காட்டுமன்னார் கோயில் மேற்கு ஒன்றியம், காட்டுமன்னார் கோயில் கிழக்கு ஒன்றியம், காட்டுமன்னார்கோயில் பேரூர், திருமுட்டம் கிழக்கு ஒன்றியம், திருமுட்டம் மேற்கு ஒன்றியம், திருமுட்டம் பேரூர், குமராட்சி தெற்கு ஒன்றியம், குமராட்சி வடக்கு ஒன்றியம், குமராட்சி மேற்கு ஒன்றியம், லால்பேட்டை பேரூர்

24/09/2025 புதன் கிழமை மதியம் 02.00 மணி சிதம்பரம் கார்த்திகேயன் திருமண மண்டபம், இளைமை யாக்கினார் கோயில் தெரு, சிதம்பரம் சிதம்பரம் நகரம், பரங்கிப்பேட்டை வடக்கு ஒன்றியம், பரங்கிப் பேட்டை தெற்கு ஒன்றியம், பரங்கிப்பேட்டை பேரூர், பரங்கிப்பேட்டை மேற்கு ஒன்றியம், கிள்ளை பேரூர், குமராட்சி கிழக்கு ஒன்றியம், அண்ணாமலைநகர் பேரூர், குமராட்சி மத்திய ஒன்றியம்.

24/09/2025 புதன் கிழமை மாலை 04.00 மணி குறிஞ்சிப்பாடி மங்கையர்கரசி திருமண மண்டபம் வடலூர் குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம், குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றியம், குறிஞ்சிப்பாடி பேரூர், வடலூர் நகரம், கடலூர் கிழக்கு ஒன்றியம், கடலூர் மேற்கு ஒன்றியம்

25/09/2025 வியாழக் கிழமை காலை 10.00 மணி கடலூர் சுப்புராயலு ரெட்டியார் திருமண மண்டபம் மஞ்சக்குப்பம் கடலூர் மாநகரம், மஞ்சக்குப்பம் பகுதி, புதுப்பாளையம் பகுதி, திருப்பாதிரிபுலியூர் பகுதி, துறைமுகம் பகுதி, கடலூர் வடக்கு ஒன்றியம், கடலூர் தெற்கு ஒன்றியம், கடலூர் மத்திய ஒன்றியம்

25/09/2025 வியாழக் கிழமை மாலை 03.00 மணி புவனகிரி KKS திருமண மண்டபம் அள்ளூர் கம்மாபுரம் வடக்கு ஒன்றியம், கம்மாபுரம் தெற்கு ஒன்றியம், கம்மாபுரம் மத்திய ஒன்றியம், கெங்கைகொண்டான் பேரூர், திருமுட்டம் வடக்கு ஒன்றியம், புவனகிரி கிழக்கு ஒன்றியம், புவனகிரி மேற்கு ஒன்றியம், புவனகிரி மத்திய ஒன்றியம், புவனகிரி பேரூர், சேத்தியாதோப்பு பேரூர், கீரப்பாளையம் கிழக்கு ஒன்றியம், கீரப்பாளையம் மேற்கு ஒன்றியம், கீரப்பாளையம் மத்திய ஒன்றியம்

அதுசமயம் சம்மந்தப்பட்ட கூட்டங்களில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சார்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள், பாக நிலை முகவர்கள்(BLA2), தேர்தல் ஒருங்கிணைப்பு குழு ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

வேலூர் மாநகராட்சி 21வது வார்டு முள்ளி பாளையம் வீராசாமி தெருவில் அமைக்கப்பட்டுள்ள சாலையை மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி, ஆகியோர் பார்வையிட்டு, மழைநீர் கால்வாய் அமைப்பது குறித்து ஆய்வு செய்தனர். உடன் ஆணையர் லட்சுமணன், வருவாய் கோட்டாட்சியர் செந்தில் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்ற தொகுதி, காட்டுக்கூடலூர் ஊராட்சியில், தமிழக அரசின் SASCI திட்டத்தின் கீழ், காட்டுக்கூடலூர் முதல் நண்டுக்குழி வரை ரூ.1.27 கோடி மதிப்பீட்டிலும், செம்மங்குப்பம் முதல் நண்டுக்குழி வரை ரூ.1.01 கோடி மதிப்பீட்டிலும், மொத்தம் 4 கிலோமீட்டர் தூரத்திற்கு சாலை அமைக்கும் பணிக்கான,அடிக்கல் நாட்டி துவக்க விழா, நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது. பண்ருட்டி முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சபா. பாலமுருகன், பொதுக்குழு உறுப்பினர் பொ.புகழேந்தி, ஒன்றிய கழக துணைச் செயலாளர் சுமதி நந்தகோபால் ,மாவட்ட பிரதிநிதி ஜெகநாதன், முன்னாள் கவுன்சிலர் ஞானசேகர்,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாரி, ஊராட்சி செயலாளர் கோதண்டபாணி, முன்னாள் கவுன்சிலர் அஞ்சுலட்சம், குமாரவேல், முருகன், கலைக்குமார், பிரேம், ரவிச்சந்திரன், மணிமொழி, அன்பழகன், சேது, வாசுதேவன், சீனிவாசன், பூபதி, ராமு , உள்ளிட்ட கழக நிர்வாகிகள், ஊராட்சி பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

ஒலக்கூர் ஒன்றியம் திண்டிவனம் கோவிந்தசாமி அரசு கல்லூரி வளாகத்தில்

'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்ட முகாம்!

முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திண்டிவனம் செப். 24-

ஒலக்கூர் ஒன்றியம் திண்டிவனம் கோவிந்தசாமி அரசு கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ. தொடங்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் 2300க்கும் மேற்பட்டவர்களுக்கு 17 வகை மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டது.

விழுப்புரம் மாவட்டம் ஒலக்கூர் ஒன்றியம் அ. கோவிந்தசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் முகாம் நடைபெற்றது.

ஒலக்கூர் ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம் தலைமையில்துணைச் சேர்மன் ராஜாராமன் முன்னிலையில் நடைபெற்ற முகாமினை

முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ .தொழிலாளர் நலத்துறை ஆணையரும், விழுப்புரம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ராமன் ஆகியோர் முகாமினை தொடங்கி வைத்துமகப்பேறு பெண்களுக்கு ஊட்டச்சத்துடன் கூடியபெட்டகத்தினை வழங்கி சிறப்புரையாற்றி நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமை ஆய்வு மேற்கொண்டனர்.

முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் அரிதாஸ், விழுப்புரம் மாவட்ட சுகாதார இணை இயக்குனர் டாக்டர்லதா ,மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர் செந்தில்குமார்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி,திண்டிவனம் சார் ஆட்சியர் ஆகாஷ்,தமிழ் நாடுதூய்மை பணியாளர் வாரிய உறுப்பினர் விழுப்புரம் கண்ணன்,திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் சாந்தி ஏழுமலை,உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முகாமில் பொது மருத்துவம், இதயம், எலும்பு, நரம்பியல், தோல் ,மகப்பேறு, குழந்தைகள் நலன், நுரையீரல், அறுவை சிகிச்சை, கண் காது மூக்கு தொண்டை, மனநலம் ,பல், சித்தா, இயன்முறை சிகிச்சை, கதிர் இயக்க சிகிச்சை மற்றும் சர்க்கரை நோய் உள்ளிட்ட 17 வகை மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டது.

முகாமில் பங்கேற்றவர்களுக்கு ரத்தப் பரிசோதனை இசிஜி உள்ளிட்ட பரிசோதனைகள் இலவசமாக செய்யப்பட்டது.

மேலும் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கு எக்கோ, கார்டியா கிராம், எக்ஸ்ரே அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் முதல்வரின் மருத்துவ காப்பீட்டு அட்டை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ்கள்கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு முகாமில்மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ்களை வழங்கினார்.

இந்த முகாமில் 2300க்கும் மேற்பட்டவர்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன.

கடலூர் கிழக்கு மாவட்டம், சிதம்பரம் நகர்மன்ற தலைவர்.நகர கழக செயலாளர், கே.ஆர்.செந்தில்குமார் எழுதிய 'மீண்டும் ஒரு காதல் கடிதம்' என்ற நூல் வெளிவீட்டு விழா நடைபெற்றது. அண்ணாமலைப் பல்கலைக்கழகமொழியியல் புல முதல்வர் அரங்க.பாரி தலைமை வகித்தார்.மூத்த மருத்துவர் கே.ஆர். முத்துக்குமரன், வீனஸ் பள்ளிக் குழும நிறுவனர் எஸ்.குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்.மது மிதா வரவேற்றார். கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. நூலை வெளியிட, கடலூர் மருத்துவர் அணி அமைப்பாளர் ,நுரையீரல் சிறப்பு மருத்துவர் பால.கலைக்கோவன் நூலைப்பெற்றுக்கொண்டார். நகர பிரமுகர் மூசா ஆகியோர் வாழ்த்துரையாற்றினர். நூலாசிரியரான நகர் மன்றத் தலைவர் கே.ஆர்.செந்தில் குமார் நன்றி கூறினார்.விழா ஏற்பாடுகளை தி.மு.க.மாநில பொதுக்குழு உறுப்பினர் ஜேம்ஸ் விஜயராகவன்,துணைச் செயலர் பா.பாலசுப்பிரமணியன்,ஆர்.இளங்கோவன்,நகர்மன்ற உறுப்பினர்கள் அப்புசந்திரசேகரன், ஏ.ஆர்.சி.மணிகண்டன்,திமுக தொழில்நுட்ப பிரிவு செயலர் ஸ்ரீதர், இளைஞர் அணி மக்கள் அருள் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகம் சார்பில், தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன், ஓரணியில் தமிழ்நாடு எனும் தலைப்பில் தீர்மானம் ஏற்கும் மாபெரும் பொதுக்கூட்டம், தியாகதுருகம் பேரூராட்சி பேருந்து நிலையம் அருகில், கலைஞர் சீரணி அரங்க வளாகத்தில், மாவட்டக் கழக அவைத் தலைவர் ராமமூர்த்தி தலைமையில் 21.09.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றது, இந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன், கழகக் கொள்கை பரப்பு இணைச் செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், தலைமைக் கழக பேச்சாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர், தொகுதி பார்வையாளர் ச.அ.பெருநற்கிள்ளி, திராவிட இயக்க எழுத்தாளர் டான் அசோக் மற்றும் தலைமைக் கழக செய்தி தொடர்பாளர், தலைமைக் கழகப் பேச்சாளர் க.நாகநந்தினி யுவராஜ் ஆகியோர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு,தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்,ஓரணியில் தமிழ்நாடு எனும் தலைப்பில் தீர்மானம் ஏற்று, திராவிட மாடல் அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துரைத்தனர். இக்கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலாளர்கள், சட்டமன்ற,நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர், ஒன்றிய,நகர பேரூர்,தலைவர்கள் துணைத் தலைவர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் என பல்லாயிரத்திற்கும் மேற்பட்டோர் பெரும் திரளாக கலந்து கொண்டு தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்,ஓரணியில் தமிழ்நாடு எனும் தலைப்பில் தீர்மானம் ஏற்றனர்.